DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.233/19

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name தர்மராஜ் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது கோயமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் இளநீர் வேலை செயது வருகிறேன். 7.5.19 அன்று நான் என் மனைவி, என மாமியார், மச்சினன், என் தம்பி எல்லோரும் ஆட்டோவில் வீரபாண்டி கோவிலுக்கு சென்றோம். சாமி கும்பிட்டு வந்து திரும்பி வந்தோம். ஆட்டோவை மிக வேகமாக ஓட்டினார். ஏன் இவ்வளவு வேகமாக போகிறீர்கள் மெதுவாக போங்கள் என்று சொன்னோம். அவர் திடீரென பிரேக் போட்டார். அப்போது பின்புறம் உட்கார்ந்திருந்த எனது மச்சினன் புழுகுசாமி கிழே விழுந்துவிட்டார். அவருக்கு தலையில் அடிப்பட்டுவிட்டது. அவரை போடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து அவரை க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு அவர் உடல்நிலை மோசமாகிவிட்டதால் அங்கிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதற்கு பின்பு அவர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்து நடந்த சமயத்தில் என் மச்சினன் தூங்கிகொண்டு வந்தார் என்றும் விபத்திற்கு அவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரிதான்.